From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 40 /2018

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Umamakeshwari | Father/Husband Name | : Chinnakalai |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 22.02.19 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2019.

முதல் விசாரணை:

நான் தொந்திலிங்கபுரத்தில் வசிக்கிறேன். மகளிர் சுய உதவிக்குழுவில் வேலை செய்கிறேன். 1வது எதிரி எனது கணவர். ஆஜர் எதிரிகள் அழகன் மற்றும் முருகனை தெரியும். மற்ற எதிரிகளையும் தெரியும். கடந்த 29.08.12ம் தேதி எனக்கும் 1ம் எதிரிக்கும் திருமணம் நடந்தது. எனது பெற்றோர் 12 பவுன் நகையும், 1 லட்சத்து 20 ஆயிரம் மதிப்புள்ள சீர்வரிசை சாமான்களும் சீதனமாக கொடுத்தார்கள். திருமணத்திற்கு பிறகு கணவர் வீட்டில் 3 மாதங்கள் சந்தோசமாக வாழ்ந்தோம். நான் கர்ப்பமாக இருந்த விசயத்தை எனது கணவரிடம் சொன்னேன். திருமணத்திற்கு முன்பும், பின்பும் மற்ற எதிரிகள் குடும்ப செலவுகளை பார்த்து வந்ததால் எனது கருவை எனது கணவர் கலைக்கச்சொன்னார். நான் கலைக்க முடியாது என்று சொன்னேன். அதற்கு என் கணவர் என்னை அடித்து துண்புறுத்தினார். நான் கோபமாக எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன். என் கணவர் ஊர் பெரியவர்களை வைத்து சமாதானம்பேசி குடும்பம் நடத்த என்னை அழைத்துச்சென்றார். நாங்கள் இருவரும் சந்தோசமாக இருந்தோம். அதன் பலனாக எங்களுக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. எங்களது வீடு கட்டியிருந்ததால் அதை பூசுவதற்கு எனது தாத்தாவிடம் பணம் வாங்கிவரச்சொன்னதன்பேரில் என் தாத்தாவிடம் ரூ.1 லட்சத்து 5 ஆயிரம் கடன் வாங்கி எனது கணவரிடம் கொடுத்தேன். அதன்பிறகு என் கணவரின்

அத்தை நிலத்தில் போர் போடுவதற்காக என் நகையை கேட்டார். நான் கொடுக்க மறுத்துவிட்டேன். அதன்பிறகு அவருடைய தூண்டுதலின்பேரில் எனது கணவர் என்னை அடித்து துண்புறுத்தினார். எனது தாத்தா வேறு ஒரு நபரிடம் ரூ. 1லட்சத்து 5 ஆயிரம் வாங்கி கொடுத்ததால் அவர் கேட்பதாக சொல்லி எனது கணவரிடம் கேட்டதற்கு, அந்த பணம் கல்யாணத்திற்கு ரொக்கமாக கொடுத்தது என்று சொல்லிவிட்டார்கள். அது சம்மந்தமாக மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். கொட்டாம்பட்டி போலீசார் விசாரித்ததில் பணம் வாங்கியதை ஒத்துக்கொண்டு எழுதிக்கொடுத்துவிட்டு சென்றார்கள். வட்டியுடன் சேர்த்து 1 லட்சத்து 25 ஆயிரம் காவல்நிலையத்தில் என் கணவரை கொடுக்கசொன்னார்கள். அவர் மொத்தமாக கொடுக்க இயலாது, கொஞ்சம் கொஞ்சமாக கொடுப்பதாக சொல்லி எழுதிக்கொடுத்துவிட்டு சென்றவர். திரும்பி பணத்தை கொடுக்கவில்லை. நகையையும் கொடுக்கவில்லை, பணத்தையும் கொடுக்கவில்லை என்ற சொல்லி எனது கணவர் என்னை அடித்து துண்புறுத்தி வீட்டைவிட்டு விரட்டிவிட்டார். மலையடிவாரத்தில் எங்கள் ஒருவீடு மட்டும் இருப்பதால் இரண்டு நாட்களாக எனது கணவர் வீட்டிற்கு வராததால் நான் குழந்தையை வைத்துக்கொண்டு தனியாக இருந்ததால் நான் பயந்துகொண்டு எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றேன். அதன்பிறகு அனைத்து மகளிர் காவல்நியைத்தில் புகார் கொடுத்தேன். 2 மாதங்களாக நடவடிக்கை எதுவும் எடுக்காததால் நான் காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். அதன்பிறகு வழக்கு பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரினைத்தான் நான் கொடுத்தேன். அந்த புகார் மனுவில் எனது கையெழுத்து உள்ளது. புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 40 /2018

Deposition of witness for: PW - 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Ravichandran, | Father/Husband Name | : | Pitchan @ Poosendu |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |
| Date | : | 22.02.19 | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2019.

முதல் விசாரணை:

நான் தொந்திலிங்கபுரத்தில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். அ.சா.1 எனது மகள். 1வது எதிரி எனது மருமகன் மற்ற எதிரிகள் 1வது எதிரியின் உறவினர்கள். கடந்த 29.08.12ம் தேதி என் மகளுக்கு 12 பவுன் நகையும், 1 லட்சத்து 20 ஆயிரம் மதிப்புள்ள சீர்வரிசை 1ம் எதிரிக்கு கொடுத்து திருமணம் நடத்தி வைத்தோம். பிறகு 3 மாதங்களில் எனது மகள் கர்ப்பமாக இருந்தபோது எதிரிகள் கர்ப்பத்தை கலைக்குமாறு தொந்தரவு செய்ததாக எனது மகள் என்னிடம் சொன்னார். பிறகு பெரியோர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து பேசி எதிரிகளின் வீட்டிற்கு அனுப்பி வைத்தோம். பிறகு பெண்குழந்தை பிறந்தது. பிறகு எதிரிகள் வீடு பூசவேண்டும் என்று சொல்லி ரூ.1 லட்சத்து 5 ஆயிரம் கேட்டார்கள். எனது மாமனார் கடனாக வாங்கி மேற்படி தொகையை எதிரிகளுக்கு கொடுத்தார். எனது மாமனார் எதிரிகளிடம் கொடுத்த பணத்தை திருப்பி கேட்டதற்கு கொடுக்க மறுத்துவிட்டார்கள். பிறகு என் மகளின் நகைகளை அடகு வைக்க எதிரிகள் கேட்டதற்கு கொடுக்க மறுத்ததால் என் மகளை அடித்து துன்புறுத்தி என் வீட்டிற்கு விரட்டிவிட்டனர். பின்னர் நாங்கள் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 40 /2018

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : Backiyalakshmi, | Father/Husband Name | : Ravichandran |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 22.02.19 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2019.

முதல் விசாரணை:

நான் தொந்திலிங்கபுரத்தில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். அ.சா.1 எனது மகள். 1வது எதிரி எனது மருமகன் மற்ற எதிரிகள் 1வது எதிரியின் உறவினர்கள். கடந்த 29.08.12ம் தேதி என் மகளுக்கு 12 பவுன் நகையும், 1 லட்சத்து 20 ஆயிரம் மதிப்புள்ள சீர்வரிசை 1ம் எதிரிக்கு கொடுத்து திருமணம் நடத்தி வைத்தோம். பிறகு 3 மாதங்களில் எனது மகள் கர்ப்பமாக இருந்தபோது எதிரிகள் கர்ப்பத்தை கலைக்குமாறு தொந்தரவு செய்ததாக எனது மகள் என்னிடம் சொன்னார். பிறகு பெரியோர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து பேசி எதிரிகளின் வீட்டிற்கு அனுப்பி வைத்தோம். பிறகு பெண்குழந்தை பிறந்தது. பிறகு எதிரிகள் வீடு பூசவேண்டும் என்று சொல்லி ரூ.1 லட்சத்து 5 ஆயிரம் கேட்டார்கள். எனது அப்பா கடனாக வாங்கி மேற்படி தொகையை எதிரிகளுக்கு கொடுத்தார். எனது அப்பா எதிரிகளிடம் கொடுத்த பணத்தை திருப்பி கேட்டதற்கு கொடுக்க மறுத்துவிட்டார்கள். பிறகு என் மகளிடம் போர் போட் நகைகளை அடகு வைக்க எதிரிகள் கேட்டதற்கு கொடுக்க மறுத்ததால் என் மகளை அடித்து துன்புறுத்திவிட்டு எதிரி வெளியே சென்றுவிட்டார். எனது மகள் மலை ஓரத்தில் வீடு தனியாக இருந்ததால் குழந்தையுடன் தனியாக இருப்பதற்கு பயந்துகொண்டு எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டார். பின்னர் நாங்கள் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். அவர்கள் விசாரணை செய்யாததால் மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை: சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 40 /2018

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : Palaniyappan, | Father/Husband Name | : Chinnan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 22.02.19 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2019.

முதல் விசாரணை:

நான் தொந்திலிங்கபுரத்தில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். அ.சா.1 எனது மகள்வயிற்று பேத்தி. எதிரிகளை தெரியும். கடந்த 29.08.12ம் தேதி எனது பேத்தி அ.சா.1க்கும் 1ம் எதிரிக்கும் திருமணம் நடந்தது. திருமணத்தின்போது 12 பவுன் நகையும் 1 லட்சத்து 20 ஆயிரம் மதிப்புள்ள சீர்வரிசை சாமான்களை சீதனமாக கொடுத்தோம். 1வது எதிரியின் சொத்துக்களை மற்ற எதிரிகளான காளியம்மாள், ஈசியம்மாள், முருகன் மற்றும் அழகன் ஆகியோர்கள் திருமணத்திற்கு முன்பிருந்து சொத்துக்களை வரவு செலவு பார்த்துக்கொண்டிருந்தார்கள். எனது பேத்தி 3 மாதம் கழித்து கர்ப்பமானார். எதிரிகள் கருவை கலைக்குமாறு என் பேத்தியை அழைத்ததற்கு மறுத்ததால் மற்ற எதிரிகளின் தூண்டுதலின்பேரில் 1வது எதிரி அடித்து துன்புறுத்தியதால் என் பேத்தி அவரது பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டார். 1வது எதிரி ஊர் பெரியோர்கள் முன்னிலையில் சமாதானம் பேசி என் பேத்தியை அழைத்துச்சென்றார். அவர்களுக்கு பெண்குழந்தை பிறந்தது. பிறகு அவர்கள் வீடு பூசுவதற்காக கடனாக பணம் கேட்டதால் நான் வேறு ஒருவரிடமிருந்து வாங்கி ரூ.1 லட்சத்து 5 ஆயிரத்தை கடனாக கொடுத்தேன். பிறகு காளியம்மாள் இடத்தில் போர் போடுவதற்காக எனது பேத்தியின் நகையை அடகு வைக்க கேட்டார். அதற்கு என் பேத்தி கொடுக்க மறுத்ததால் மற்ற எதிரிகளின் தூண்டுதலின்பேரில் 1வது எதிரி என் பேத்தியை அடித்து துண்புறுத்தியதால் மற்ற எதிரிகள் என் பேத்தியிடம் நீ நகையை கொடுக்காவிட்டால் உன்

கணவருக்கு வேறு திருமணம் செய்துவிடுவோம் என்று மிரட்டினார்கள். பிறகு எதிரி என் பேத்தியை அடித்து கொடுமைப்படுத்திவிட்டு வெளியே சென்றுவிட்டார். பிறகு அ.சா.1 தனியாக இருக்க பயந்துகொண்டு அவரது அம்மா வீட்டிற்கு வந்துவிட்டார். பிறகு மேலூர் மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். அப்போது அவர்கள் எதிரியை அழைத்து பேசியதில் நான் கடனாக வாங்கி கொடுத்த மேற்படி தொகைக்கு வட்டியுடன் சேர்த்து 1 லட்சத்து 25 ஆயிரம் கொடுத்துவிட்டு அ.சா.1ஐ 1ம் எதிரி அழைத்துச்சென்று வாழ்வதாக எழுதிக்கொடுத்துவிட்டு சென்றார். பிறகு 1ம் எதிரி மாவட்ட ஆட்சியரிடம் அவரது மனைவியை நான் கடத்திச்சென்றதாக புகார் கொடுத்தார். அதன்பிறகு கொட்டாம்பட்டி போலீசார் விசாரித்தனர். அங்கு 1ம் எதிரி 1 லட்சத்து 25 ஆயிரம் பணத்தை கொடுத்துவிட்டு அ.சா.1ஐ அழைத்துச்சென்று வாழ்வதாக எழுதிக்கொடுத்துவிட்டு சென்றார். பிறகு எதிரி அ.சா.1ஐ அழைத்துச்செல்லாததால் மீண்டும் மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். அங்கு நடவடிக்கை இல்லாததால் மதுரை காவல் கண்காணிப்பாளரிடம் அ.சா.1 புகார் கொடுத்தார். அதன்பிறகு அனைத்து மகளிர் போலீசார் வழக்கு பதிவு செய்தார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.